பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 23 வெள்ளிக்கிழமை (07-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 253

# படையினர் இழப்பு அதிகரிப்பதால் புதிய போர் உத்திகளில் நாட்டம்

## பிரிகேடியர் விஜேசேகரா தகவல்

கொழும்பு, ஆகஸ்ட் 7

கடந்த ஒரு மாத காலத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் அதிகமாக உள்ளன. இதனால் புதிய போர்முறை உத்தி குறித்து திட்டம் வகுப்பதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இராணுவத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் தயா விஜேசேகரா நேற்று செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்டார்.

கடந்த ஒரு மாத காலத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களுக்கு இலக்காகி பேரிழப்பைச் சந்தித்து இருக்கும் இராணுவம் தனது போர் உத்திகளை மாற்றியிருப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை பிற பகுதிகளிலிருந்து துண்டித்து விடும் இராணுவத்தின் போக்கைத் திசை திருப்பவே விடுதலைப் புலிகள் தாக்கிவிட்டு மறைவது என்ற கெரில்லாப் போர் முறையைக் கிழக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் ஷெல் வீச்சுக்கு சிறுமி மரணம்; 5 பேர் காயம்

ஏழாலை மேற்கு, சைவ சன்மார்க்க வித்தியசாலைக்குச் சமீபமாக நேற்றுப் பகல் 11.30 மணியளவில் விழுந்த ஷெல்லுக்கு ஒரு சிறுமி பலியானார். மற்றும் நான்கு பிள்ளைகளும், வயோதிபப் பெண் ஒருவரும் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒரு சிறுமி ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பலாலி முகாமில் இருந்து நடத்தப்பட்ட இந்த ஷெல் வீச்சினால் மற்றும் சிறுவர், சிறுமியர் சிலரும் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடத்தப்பட்ட விசேட வகுப்பில் கலந்து கொண்டு திரும்பிய மாணவர்களே ஷெல் வீச்சுக்கு இலக்காகினர்.

மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த தம்பிராசா சர்விழி (11 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சிவலிங்கம் சிவரஞ்சனி (10 வயது) மல்லாகம், வரதராசா ஜெயந்தா (10 வயது) கோட்டைக்காடு, மகேந்திரராசா ஐங்கரன் (10 வயது) ஏழாலை மேற்கு, இரத்தினசிங்கம் ராஜ்குமார் (10 வயது) கோட்டைக்காடு, மற்றும் கந்தையா வள்ளிப்பிள்ளை (73 வயது), மயிலங்காடு ஆகிய ஐவருமே படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ-45-13-15-89)

## இந்திய அரசும், ஐ. நா. அகதிகள் தூதரகமும் ஈழத் தமிழ் அகதிகள் குறித்து ஐந்து அம்ச உடன்படிக்கை

### பிரட்மன் நேற்றுத் தகவல்

கொழும்பு, ஆக. 7

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்துக்கு திருப்பி அனுப்பி வைப்பது தொடர்பாக ஐ. நா. அகதிகள் தூதரக அமைப்பும் இந்திய அரசும் ஐந்தம்ச உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளன.

கடந்த மாத இறுதி வாரத்தில் இந்த உடன்பாடு ஜெனிவாவில் கைச்சாத்தானதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இருந்து இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற கடிதத் தொடர்புகளை அடுத்தே இந்த உடன்படிக்கை ஏற்பட்டது.

இந்த ஐந்து அம்ச உடன்படிக்கையில் —

இந்திய அரசாங்கம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்களின் பட்டியலையும் சுயவிருப்பத்தின் பேரில் நாடு திரும்புவதற்கென உறுதி செய்யப்பட்ட படிவங்களையும் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று திருமலை புறப்பட்ட 131 அகதிகளில் மூவர் தடுத்து வைப்பு

### ஒருவர் பற்றி தகவல் இல்லை

127 பேரைக் கொண்ட இலங்கைத் தமிழ் அகதிகள் குழு ஒன்று நேற்றுக் காலை இந்தியன் எயர்லைன்ஸ் விமான மூலம் சென்னையில் இருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டது.

இந்த விமானத்தில் 131 இலங்கைத் தமிழ் அகதிகளை திருகோணமலைக்கு அனுப்பி வைப்பதாக முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர் 127 அகதிகளே விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

எஞ்சிய நான்கு அகதிகளில் மூவர் குடியேற்ற அதிகாரிகளால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டனர் என்றும் —

ஒருவரைக் காணவில்லை என்றும் — அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-...)

## அராலி நோக்கி ஷெல் வீச்சு!

சுழிபுரம், ஆக. 7

நேற்றுப் பகல் மண்டைதீவு, காரைநகர்ப் பகுதிகளில் இருந்து அராலி, வட்டுக்கோட்டை, மூளாய் வயல்கரைப் பகுதிகளை நோக்கி ஐந்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன.

ஷெல் தாக்குதல்கள் நடைபெற்ற சமயம் ஹெலிக்கொப்டர் ஒன்றும் அப்பகுதியில் வட்டமிட்டது. (ஓ-28)

## புலிகளுடன் பேசுவது குறித்து தெரிவுக்குழுவே தீர்மானம் மேற்கொள்ள வேண்டுமாம்

கொழும்பு, ஆக. 7

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதனால் அது குறித்து நாடாளுமன்ற தெரிவுக் குழுவே தீர்மானிக்க வேண்டும்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் சமாதானப் பேச்சு எதனையும் நடத்துகிறதா என்று செய்தியாளர்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவைக் கேட்டனர்.

அதற்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## துர்க்கை அம்மன் கோவிலுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து நஷ்டஈடு

### அரச அதிபரிடம் சேதவிவரம் கேட்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஆக. 7

விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சினால் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்களையும், சேதமதிப்பீட்டையும் உடனே அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது.

### அரசு அறிக்கை சமர்ப்பிக்குமாம்

இயக்கச்சிப் பகுதியில் சீனச் சகலட விமானம் தகர்க்கப்பட்டது, வெலிக்கந்த அசம்பாவிதம், கிரான்குள முஸ்லிம்கள் படுகொலை, சீனன்குடா குண்டு வெடிப்புச் சம்பவம் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி பூரண விவரங்கள் அடங்கிய குழுக்களின் அறிக்கைகளை அடுத்த வாரத்தில் வெளியிடுவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் இத்தகவலை நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இது சம்பந்தமாக, ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் அனுப்பி வைத்த கடிதம் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு நேற்றுக்கிடைத்தது.

தெல்லிப்பழை அம்மன் கோவிலுக்கு ஏற்பட்ட சேதத்துக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து நஷ்டஈடு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக திரு. பிரட்மன் வீரக்கோன் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

துர்க்கை அம்மன் கோவில் மீது குண்டு வீச்சு நடத்தப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செயலக பொதிகள் பல கப்பலில் வந்து சேரவில்லை

அரச அதிபரின் பெயரில் எடுத்துவரப்படுவதாக இருந்த பொதிகள் பல 'குமண' கப்பலில் கொண்டுவரப்படவில்லை.

பிறப்புப் பதிவுப் புத்தகங்கள், மதிய உணவு முத்திரை, மற்றும் ஆவணங்கள், காகிதாதிகள் என்பன அவற்றுள் அடங்கும்.

'குமண' கப்பலில் நேற்று பொருள்கள் இறக்கப்பட்ட போது மேற்படி பொதிகள் கப்பலில் இல்லாதிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் அவை கப்பலில் ஏற்றப்பட அனுப்பிவைக்கப்பட்டிருந்தன என்றும், இறுதி நேரத்தில் கப்பல் புறப்பட்ட சமயம் அவை ஏற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்படவுள்ள 'குமாரி' கப்பலில் அந்தப் பொதிகள் எடுத்துவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

## தட்டெழுத்தாளர் பரீட்சை அடுத்த மாதத்தில்

அரச சேவை, மாகாண சபை — கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான பொதுப் பரீட்சை எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கின்றது.

இத்தகவலை பொது நிர்வாக, மாகாண சபைகள் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டார்.

இப்பதவிக்குரிய விண்ணப்பங்கள் தற்போது கோரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரம் கொடுக்கும் வனம்
அதை வளர்த்து வா தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக்கு 03-08-1992 ஆம் திகதி முதல் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளமையால் மேற்படி சங்கத்துடன் ஏதாவது கொடுக்கல் வாங்கல் உள்ளவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
ஏ. ஸி. செபநாயகம்
தலைவர்.
[இடைக்காலம்]

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
05-08-92.

[சி-3024]

---

New Science Academy
JAFFNA

## 94 A/L

புதிய பிரிவு

PHYSICS
MECHANICS
BY
கணேசன் B. Sc.

Sat., Sun. 9—10
ஆரம்பம்: 9-8-92

[சி-3022]

---

## ஆஸி கிரிக்கெட் அணி கொழும்பு வருகிறது

அலன்போர்டரின் தலைமையிலான ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இன்று [வெள்ளி] கொழும்பு வருகிறது.

ஆறு வார கால பயணம் ஒன்றை மேற்கொண்டு வரும் இந்த அணி இலங்கை அணியுடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் மோத உள்ளது. [த-எ]

---

## A/L MATHS

திரு. குணசிங்கம்
B. sc. (Hons)

Personal
New Science Centre
Jaffna

[C/3118]

---

## ஏழாவது பிறந்த தின வாழ்த்து

★★★◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆★★★



செல்வி

### ★அருள்நந்தி - ஏமி★

தற்பொழுது மல்லாகத்தில் வசிக்கும் மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருள்நந்தி - கமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஏமி தனது பிறந்த நாளை இன்று [07-08-92] இல் மல்லாகம் இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணா, அப்பம்மா, அம்மம்மா, அப்பன் மாமா [அமெரிக்கா], நாதன் மாமா [அமெரிக்கா], சித்தப்பா, சித்தி [ஆனைக்கோட்டை], சித்தப்பா, சித்தி [கிளிநொச்சி], பெரியப்பா, பெரியம்மா [பரந்தன்], சித்தி, சித்தப்பா [கனடா], அன்ரிமார் [மானிப்பாய்], உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவன் அருளோடு வாழ்த்துகின்றனர்.

சோடா கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

[4934]

---

நாளை ஆரம்பம்:
08-08-1992
Sat.

94 திரிகோணகணிதம்
Sat. & Sun.
8 — 9-30 a. m.

94 வேக நேர வளையி
Sat. & Sun.
9-30 — 11-00 a. m.

பிரிவு I

93 நேர்கோடு
Sat. & Sun..
11 — 12-30

93 மூட்டிய கோல்
Sat. & Sun.
12-30 — 2-00

பிரிவு II

நீர் நிலையியல்
Sat. & Sun.
3-45 — 5-00

ஈருறுப்பு விரிவு
Sat. & Sun.
5-00 — 6-15

Mr. கணேசன்
B. Sc. (Hons)

"A" LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3117]

---

## விண்ணப்ப படிவங்கள்

எழுதுவினைஞர்

| | |
|---|---|
| இனியோ பாங்க் தாள் | ரூ. 6.00 |
| சாதாரண தாள் | ரூ. 3.00 |
| N. D. T. | ரூ. 7.00 |

(மொறட்டுவ பல்கலைக் கழகம்)

சுருக்கெழுத்து தட்டெழுத்து ரூ. 6.00

மேற்படி படிவங்களைப் பெற்றுக்கொள்ள,

அருண் பிரிண்டேர்ஸ் அண்ட் பப்பிளிசேர்ஸ்,
15, 2, ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி,
[ஷப்றா அருகாமையில்]
யாழ்ப்பாணம்.

★ சொற்ப படிவங்களே கைவசம் உண்டு.
★ விண்ணப்ப முடிவு திகதி 14-8-1992.
★ வர்த்தமானிப் பிரதிகள் பார்வைக்கு உண்டு.

[சி-3120]

---

யாழ். கிளையின் விசேட பொதுக்கூட்டமும், பிரிவுகளுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டமும்.
ஒத்தி வைக்கப்படுவதற்கான

## அறிவித்தல்

எதிர்வரும் 23-08-1992 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த யாழ். கிளை விசேட பொதுக் கூட்டமும், எதிர்வரும் 09-08-1992 ஆம் திகதி ஒவ்வொரு பிரிவிலும் நடைபெற இருந்த வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய செயற்குழுத் தேர்தல்கள் சம்பந்தமாக பல முறைப்பாடுகள் எமக்கு வந்துள்ளமையாலும், இம் முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்து குறைபாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டி இருப்பதனாலும் மறு திகதி அறிவிக்கப்படும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

ஏ. ஸி. செபநாயகம்
தலைவர்,
(இடைக்காலம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை தலைமை பணிமனை,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3023]

---

## அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

"எமது பாரம்பரிய வளங்கள் அழிந்துகொண்டு போகின்றன; கடும் வரட்சி, இயற்கை அனர்த்தங்கள், போர்க்காலச் சூழ்நிலைகள் ஆகியவற்றினால் எமது முன்னோர்கள் வளர்த்த மரங்கள் பெருமளவில் அழிந்துவிட்டன." இந்நிலையில் மிகவும் விழிப்பாக செயற்படவேண்டிய அவசியம் அனைவருக்கும் உண்டு.

### மரநடுகையை ஊக்குவிக்குமுகமாக...

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள
பாடசாலை மாணவர்கள், பாடசாலைகள் பங்குகொள்ளும்
30 லட்சம் ரூபா பெறுமதியான

### மரநடுகைப் போட்டித் திட்டமொன்றை

நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பாக ஆர்வமுடைய அதிபர்கள், ஆசிரியர்களுடைய விரிவான ஆலோசனைகளை எதிர்பார்த்து, 09-08-1992 அன்று காலை 10-00 மணியளவில் எமது தலைமைப் பணிமனையில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் பங்கு கொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### "மரம் நடுவோம், சூழலைப் பாதுகாப்போம்"

செயலாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

[22050]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 03 | 06 |
| 12 | 07 |
| 1917 | 1992 |

அமரர்

### திருமதி. பத்மாவதி இராசநாயகம்

[காலஞ்சென்ற முகாந்திரம் இராசநாயகம் அவர்களின் துணைவியார்]

அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இன்று [7-8-92] இல் எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இதில் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

[22071]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி இராணுவ முகாமில் யுத்தகால சிவில் அமைப்பு

## குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கு முன்னோடியாம்

கொழும்பு, ஆக. 7

யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்டெடுக்கும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்னோடியாக பாதுகாப்புப் படையினர் பலாலியில், யுத்தகால சிவில் அமைப்பு ஒன்றை உருவாக்கவிருப்பதாக மிக நம்பகமாகத் தெரிகிறது என்றும்—

இதற்கான ஏற்பாடுகள் பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாழ். குடாநாட்டை மீட்டு எடுக்க வேண்டுமானால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என உணர்ந்துள்ள பாதுகாப்புப் படையினர், இந்தப் பாரிய யுத்தத்தின் போது பொதுமக்களைப் பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் நலன்களைக் கவனிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவே இந்த யுத்தகால சிவில் அமைப்பை பலாலியில் அமைக்க முன்வந்துள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச இராணுவ உத்தியின்படி, கேந்திர முக்கியத்துவமான பகுதியில் இருந்து அப்பகுதியில் வாழும் பொது மக்கள் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பகுதி ஒன்றுக்கு இடம்பெயருமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

அவ்வாறு இடம்பெயரும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் உணவு, சுகாதாரம் மற்றும் சமூக நடவடிக்கைகளை நிறைவேற்றி அவர்களது நலன்களைக் கவனிக்க இந்த யுத்தகால சிவில் அமைப்பு உருவாக்கப்பட உள்ளது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்புக் கட்சிகளுடன் முஸ்லிம் காங்கிரஸ் பேசும்

கொழும்பு, ஆக. 7

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச உள்ளனர்.

இப்படி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கீழ் உருவாக்கப்படும் முஸ்லிம் கவுன்ஸிலுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் மற்றும் முஸ்லிம் கவுன்ஸிலுக்கு வெளியே வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக இப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பாதுகாப்பு அம்சங்கள் எந்தந்த அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் என்பது பற்றி தமிழ்க்கட்சிகள் ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸிடம் கையளித்து விட்டன.

இதேவேளை — நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு எதிர்வரும் செவ்வாய் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

[த-எ]

## மட்டுவிலில் நினைவஞ்சலி கூட்டம்

சாவகச்சேரி, ஆக 7

வீரமரணமடைந்த சாவகச்சேரி வட்டத்தைச் சேர்ந்த 18 மாவீரர்களின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் மட்டுவில் வடக்கில் அண்மையில் நடைபெற்றது.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் மலர்மாலை சாத்தி குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தனர்.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பல பிரமுகர்கள் உரையாற்றினர். பெருமளவு மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். [த-31]

## வெளிநாட்டு உதவிகள்; இலங்கை அரசு சாதனை!

கொழும்பு, ஆக. 7

வெளிநாடுகளிடமிருந்து உதவிகள் பெறுவதிலும் தற்போதைய அரசாங்கம் சாதனை புரிந்துள்ளது.

எந்த ஓர் அரசாங்கமும் செய்யாத சாதனை இது என்று வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

"எதிர்க்கட்சியினர் கூறுவது போல நாங்கள் யாரிடமும் கையேந்தி நிற்கவில்லை'— என்றும் அவர் கூறினார்.

(த-எ)

C. C. A. யாழ்ப்பாணம்
A/L 93
பொருளியல் - திரு. உதயன்
வரவு-செலவுத்திட்டம் தேசிய வருமானம்
உற்பத்திக் காரணிகள்
ஆரம்பம்:- 08-08-1992
சனி, ஞாயிறு 8 - 9 மணி
(சி/2994)

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
★ இசை மாலை ★
இடம்: இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம். இன்று 07-08-1992
சென். ஜோன்ஸ் கல்லூரி,
சுண்டிக்குளி. 09-08-1992
காலம்: இரவு 8-30 மணி
நுழைவுச் சீட்டுக்கள்:
ரூபா 100-/ இருவருக்குரியது.
ரூபா 50/-, 25/- தனி ஒருவருக்குரியது.
ரூபா 10/- பாடசாலை மாணவர்களுக்குரியது.
ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
"செஞ்சோலை" நிர்வாகத்தினர்.
[சி-3021]

C. C. A. யாழ்ப்பாணம்.
A/L 1993
கணக்கியல் திரு. ஸ்ரீ
பங்குடமை
சனி, ஞாயிறு 2 — 3
மாற்று உண்டியல்
சனி, ஞாயிறு 11 — 12
குறிப்பு ★ இரண்டு மணிநேர வகுப்புக்கும் ஒரே கட்டணமே அறவிடப்படும்.
★ குறிப்பிட்டளவு மாணவர்களுக்கே அனுமதியுண்டு.
ஆரம்பம்: 08 - 08 - 1992
[சி-2992]

தவறிவிட்டது

அக்கரையிலிருந்து இம்மாதம் 3ஆம்திகதி இரவு கிளாலி வந்து சேர்ந்த போது, மூக்குக் கண்ணாடி மற்றும் முக்கிய ஆவணங்கள், உடுப்புடைகள் உட்படப் பல பொருள்கள் அடங்கிய தோல் கைப்பிடி போட்ட பிளாஸ்டிக் பை ஒன்று தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கிளாலி, படகுச் சேவை பொறுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். அல்லது தபால் மூலம் உதயன் பணிமனைக்குத் தொடர்பு கொள்ளவும்.
வே. கந்தப்பு. மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
[ச-109]

எழுதுநர் தரங்களுக்கும், அதனோடிணைந்த தரங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
போட்டிப் பரீட்சை - 1992
மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் 07 - 08 - 1992 வெள்ளி காலை 9-00 மணியளவில் ஆரம்பமாகின்றன.
பாடநெறிகள்
1. தமிழ் 2. கணக்கு வைத்தல் 3. நுண்ணறிவு
விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-
நிர்வாகி,
மொடேர்ன் எடியுகேசன் சென்ரர்,
நெல்லியடி, கரவெட்டி. [சி-3020]

C. C. A. யாழ்ப்பாணம்
கலை, வர்த்தகக் கல்லூரி
வெலிங்டன் சந்தி அருகாமை
A/L 93
வார இறுதி மாலை நேர வகுப்புகள்
பொருளியல் 2 — 3 — திரு. உதயன் (சென்மதி நிலுவை)
கணக்கியல் 3 — 4, 4 — 5 — திரு. ஸ்ரீ (ஒற்றைப் பதிவு, கம்பனி)
வர்த்தகம் 5 — 6 — பிரபல ஆசிரியர் (பகுதி II)
அளவையியல் 12 — 1 — திரு. சயந்தன் (குறியீட்டு அளவையியல்)
புவியியல் — திரு. வேலாயுதபிள்ளை (அபிவிருத்தி புவியியல்)
இந்து நாகரிகம் 1 — 2 — திரு. ஜோதிஸ்வரன்
தமிழ் — திரு. குழந்தை
அரசியல் — திரு. பஞ்சாட்சரம்
கிறிஸ்தவம் — திரு. அமலதாஸ்
ஆரம்பம்: 08 - 08 - 1992
(சனி) மாலை 2 மணி
[சி-2997]

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
A/L 93, 94
அரசியல்:
கியூபேட்
93 — 12 மணி
94 — 10 மணி
இந்து சமயம்:
திருமதி
எஸ். அருள்நங்கை
3 மணி

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 — 09 — 1933



மறைவு: 17 — 07 — 1986

திருமதி
யோகம்மா சுப்பிரமணியம்
(முன்னாள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியை)

திதி: 07-08-1992

அம்மா! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், தாய், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

'யோக பவனம்',
மருதடி, சாவகச்சேரி.
[5226]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் கோயில் முன் வாசலில் அமைந்திருக்கும் எமது அண்ணா கோப்பி நிலையத்தில் உங்களுக்குத் தேவையான குரக்கன் மா, ஆட்டா மா, அரிசி மா, உழுந்து மா, மிளகாய்த்தூள், கோப்பித் தூள், தேயிலை, இனிப்பு வகைகள் ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளுங்கள், அண்ணா தொழிலகம், இணுவில்.

[சி-2988]

தாவடி, மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர் முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு]

(22043)

அழகிய வெள்ளை, மண் நிறமுடைய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48/1, 1ஆம் ஒழுங்கை [மக்றவல் லேன்], பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் [22055]

ஜெனன ஜாதகக் குறிப்பு, வியாபார ஸ்தாபனத்திற்கேற்ற பிளேன் பில் புத்தகங்கள் [பல அளவுகளிலும்] தமிழ் செயல் நூல் ஆண்டு 5, மற்றும் வாலி, பன்னிருதிருமுறைத் தோத்திரத் திரட்டு, கந்தபுராணம் - உரையுடன், மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் [22063)

## மணமகன் தேவை

29 வயது இந்து, லக்கினத்தில் கேது, நட்சத்திரம்; பூரம், 1ஆம் பாதம், பட்டதாரி ஆசிரியைக்கு அரசாங்க, தனியார் துறைகளில், 36 வயதிற்குள் மணமகன் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்க. இல.854, மே/பா, உதயன்.

[5223]

## வாடகைக்கு தேவை

யாழ். பல்கலைக்கழக ஒருமைல் சுற்றாடலில் சிறு குடும்பத்திற்கு வீடு அல்லது பகுதி வீடு [Annex] வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்க. இல.429, மே/பா, உதயன்.

[22065]

## புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை 09-08 92 ஞாயிறு மு. ப. 7 - 00 — மு ப. 9-45 ஆகிய நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் புதிய கல்வி நிலையம், 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [22045]

ஆண்டு 4 5 -க்கான புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை எதிர்வரும் சனி ஞாயிறு தினங்களில் (8-8-92, 9-8-92) காலை 9-15 மணிக்கு நடைபெறும். அத்துடன் ஆண்டு 5 இற்கான புலமைப்பரிசில் வகுப்புகள் இலவசமாக நடத்தப்படும். நாவலர் கல்விகழகம், நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

[22050]

## வியாழ மாற்றம்

11-09-1992 இல் நிகழும் வியாழ மாற்றப் பலாபலன்கள் விற்பனையாகின்றன. பன்னிரு இராசிகளுக்கும் விரிவான பலன்கள் உண்டு. விலை ரூபா 8/-. திருக்கணிதம், மடடுவில், சாவகச்சேரி.

[22056]

## அம்பாள் திருமண சேவை

வங்கி உத்தியோகத்தர் வயது 34, மணமகனுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று மைலுக்குள் இருக்கும் அழகிய, படித்த மணப்பெண் தேவை. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர்.

[22062]

## பயிற்சிகள்

மெய்கண்டதேவர், சிவஞான சைவசித்தாந்த உயர் நிறுவனச் சார்பிலே யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் சனி, ஞாயிறு முற்பகல், பிற்பகல் பயிற்சிகள் இலவசமாக நடைபெறுகின்றன. மூதறிஞர் க. சி. குலரத்தினம் சனி பிற்பகலும், சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளை ஞாயிறு முற்பகலும் கலந்து கொள்வர். சனி முற்பகல் சிவஞான போதம், ஞாயிறு பிற்பகல் கண்காட்சி நிகழும்.

[22046]

---

# கீன்
## கல்வி நிலையம்
திருநெல்வேலி.

# A/L 93

## பொருளியல்
**S. வரதராஜன்**
B.A. [Hons]

- ★ தேசிய வருமானம்
- ★ வரவு-செலவுத் திட்டம்

ஆரம்பம்:
**09-08-1992**
[ஞாயிறு]

- ★ வாரத்தில் 5மணித்தியால வகுப்பு
- ★ விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி-8105]

---

# நாவலர்
சித்தன்கேணி

## 94 A/L கலை, வர்த்தகம்
புதிய பிரிவு 09-08-1992 ஆரம்பம்

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீகாந்தன் |
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ், இந்து நாகரிகம் | — | திரு. கெங்கா |

## 93 A/L
பொருளியல்

பகுதி II ஆரம்பம்:- 08-08-92
செல்வி நிலுவை
**K. கலாகரன்**

(சி/2999) சனி, ஞாயிறு 5 — 6

---

# நினைவஞ்சலி



உதயம்: 13 — 04 — 1966

அஸ்தமனம்: 01 — 08 — 1990

## திருமதி ஜெயந்திமதி சிவராசா
[வேலணை கிழக்கு]

ஆண்டுத் திதி: 07 — 08 — 1992

எண்ணக் கோபுரத்தில் ஏற்றிய தீபமது
கண்ணயர்ந்தே போய் இருண்டது ஈராண்டு
பாச உறவினை பிரிந்து வருந்தலும்
நேச உறவுகளின் நிலையது - இயல்பேயாயினும்
கூடிக் குலாவிய கூண்டுக்கிளியது
கூடிய விரைவில் குலத்தினை விட்டகன்று
பாதி ஒளியினை பரப்பி மறைந்ததால்
வாவிகள் நாம் பரிதவித்தோம் .. .. பயனில்லை
நிழலான நினைவுகளை நெஞ்சினில் நிறுத்தி
நின்னாத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்-
நாளும்.

— குடும்பத்தினர்.

4ஆம் ஒழுங்கை,
இல. 12, பி...
யாழ்ப்பாணம்.

[5230]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 93 கலை, வர்த்தக வகுப்புக்கள்

08 - 08 - 1992 காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துசமயம், இந்துநாகரிகம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

[சி-3112]

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 04 — 05 — 1973

மண்ணின் மடியில்: 07 — 08 — 1989

## வீரவேங்கை ஜேம்ஸ்
(சி. மணிவர்மன்) பருத்தித்துறை

அண்ணனவன் வழிதனில் வீறு கொண்டு எழுந்தான்
அந்நியனவன் பாதம்
தமிழ் மண்ணில் பதியாது என்றான்
உற்றார் உறவுதனைத் துறந்தான்
உயிரே தமிழீழம் என்றே நின்றான்
தமிழீழம் மீட்டிட தனை ஈந்தான்
தரணி புகழ் பாடிட மனதினிலே நிறைந்தான்
ஆண்டுகள் ஓர் மூன்று உருண்டோடிச் சென்றது
ஆனாலும் எம் நெஞ்சை உருக்குதே உன் நினைவு
காலத்தால் அழிந்திடுமா நீ கொண்ட தாகமது
கண்டிடுவோம் தமிழீழம் உன் வழிதனில் சென்று
தணியாத தாகம் தமிழீழத் தாயகம்.

- குடும்பத்தினர்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

[5233]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 10 — 1917

உதிர்வு: 20 — 07 — 1991

அமரர்
## திருமதி முருகப்பர் சின்னப்பிள்ளை

திதி: 07 — 08 — 1992

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி - மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! - எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றதம்மா - உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது;

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்;
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வரணி வடக்கு,
வரணி.

[22034]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## பிஞ்சுகளைக் காப்பாற்றுங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழந்தைகள் மத்தியில் போசாக்கின்மைப் பாதிப்பு பரவி வருகிறது. தமிழ்ப் பகுதிகள் மீது படையினர் இராணுவத் தாக்குதல் நடத்திப் பலரைத் தொழில் இல்லாமல் மாற்றியதிலிருந்தே இப்பாதிப்பு ஆரம்பமாகி விட்டது. அரசின் பொருளாதாரத் தடையோடு நிலைமை மோசமாகியது. குடாநாட்டு மக்களில் பலர் அகதி முகாம்களில் வாழும் நிலை பாதிப்பைப் பலமடங்காக்கிற்று.

குடாநாடு முழுவதிலும் 1,500 முதல் 2,000 வரையான குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தான ஒரு நிலையாகும். அவர்கள் இறக்கும் தறுவாயில் உள்ள கட்டத்தை எட்டுகிறார்கள் என்ற தகவல் மிகப் பயங்கரமான நிலையைக் குறிக்கிறது.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டவர்களென இனங்காணப்பட்ட குழந்தைகளில் நால்வர் கடந்த ஒரு மாதத்தில் இறந்திருக்கிறார்கள் என்பது, குடாநாட்டின் எதிர்காலப் பிரஜைகளை எதிர்நோக்கியுள்ள பயங்கரத்தின் தன்மையை எடுத்துக் காட்டப் போதுமானது.

சமூக நலனில் அக்கறையுள்ள சகலரினதும் கவனத்தை ஈர்க்க வேண்டிய இது விடயத்தில் உடனடியான செயற்பாடும், ஒருங்கிணைந்த துடிப்பான விரைந்த நடவடிக்கையும் தேவை.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 2,000 குழந்தைச் செல்வங்களையும் இறந்தொழியவிட்டு, அந்தச் சமூகத் துரோகத்தில் நாமும் பங்காளிகளாகப் போகிறோமா என்பதை ஒவ்வொரு தமிழரும் தமது மனதைத் தொட்டுக் கேட்க வேண்டும்.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென போசாக்குப் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்திருப்பது ஓர் ஆக்கபூர்வமான ஏற்பாடாகும். பாதிக்கப்பட்ட குழந்தைகள் பரவலாக இருப்பதால் அவர்களை இனங்காணுதல், அவர்களுக்கான பணிகளை ஒருமுகப்படுத்தல் ஆகியனவற்றை இதன் மூலம் ஒருவழிப்படுப்படுத்தி ஆற்றுப்படுத்தி உரிய பெறுபேறுகளை அடையலாம்.

இது விடயத்தில் சுகாதாரத் திணைக்களம் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் தமது வளங்களை ஒன்று திரட்டியும் சேவைகளை இணைத்து ஒருமுகப்படுத்தியும் பணிபுரிவது அவசியமாகும். எல்லோரது கூட்டுமுயற்சியும் சேர்ந்தால், 2,000 குழந்தைகளையும் காப்பாற்றி வாழ்வளிக்கலாம்.

போசாக்குள்ள உள்ளூர் உணவுப் பொருள்களை எவ்வாறு இத்தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கான சாத்தியங்களையும் இவ்வேளையில் ஆய்ந்தறிந்து அறிமுகப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வித ஆபத்து இளம் சந்ததியை அச்சுறுத்தாமல் தவிர்க்க முடியும். குறைந்த செலவில் நிறைந்த போசாக்குள்ள உள்ளூர் உணவு வகைகளை மக்கள் மத்தியில் குறிப்பாக தாய்மார் மத்தியில் அறிமுகப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டப்படவேண்டும்.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்ற எல்லோரது ஒத்துழைப்பும், ஆதரவும், கூட்டு முயற்சியும் உடனடித் தேவைகளாகும்.

# தமது குழந்தைகளை விற்க முயலும் அகதிகள்

## கோமாரியில் பரிதாபம்

மட்டக்களப்பு, ஆக. 7

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கோமாரிக் கிராமத்தில் அகதிகளாகத் தங்கியுள்ள தமிழர்கள் சிலர் தமது குழந்தைகளை விற்க முயற்சிக்கிறார்கள் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்த பின்னர் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட 604 குடும்பங்கள் கோமாரியில் கடந்த 25 மாதங்களாக வசித்து வருகின்றன. இவர்களில் 55 பேர் இளம் விதவைகள்.

இவர்கள் தங்கியுள்ள முகாம்களில் மலசலகூடம், குடிதண்ணீர்கிணறு போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என்றும்—

மாதம் ஒரு தடவை மட்டுமே உலர் உணவு வழங்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரச அதிகாரிகளோ அல்லது தொண்டர் ஸ்தாபனங்களோ அந்த மக்களுக்கு எந்த வித உதவியையும் வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்குச் செல்லும் வயதுள்ள சிறார்களுக்கு உடைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் பாடசாலைக்கு செல்லாது உள்ளனர் என்றும்—

இக்குழந்தைகளில் பலர் விதவைகளின் பிள்ளைகள் என்றும், சில தாய்மார் தமது குழந்தைகளாவது எதிர்காலத்தில் சிறப்பாக இருக்கட்டும் என்ற நோக்கத்துடன் அவர்களை விற்க முனைவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [இ-3]

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 7

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — ஐந்தாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் [மாலையில்]— வர்ணராமேஸ்வரனின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] கானகதாவாரிதி பிரம்ஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''முருகோதயம்'' என்ற பொருளிலான கந்தப் புராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2 மணிக்கு — கந்த புராணப் படிப்பு, பிற்பகல் 3 மணிக்கு பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [ஒ-126]

## மாதாந்த உதவிப்பணம்

அராலி, ஆக. 7

வலி - மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான மார்ச், ஏப்ரல் மாத கொடுப்பனவுகள் அவ்வப் பகுதி கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன. [த-12]

## ஊர்காவற்றுறை வங்கிக் கிளை ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஆக. 7

இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளை வாடிக்கையாளர்களுக்கு ஆகஸ்ட் மாதத்துக்குரிய சிவில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை பணமாக வழங்கப்படும் என ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

ஜூலை மாதத்துக்குரிய ரயில்வே, உள்ளூராட்சி ஓய்வூதியர் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. [இ]

## நுவரெலியாவில் பெருமழை!

கொழும்பு, ஆக. 7

நுவரெலியா மாவட்டத்தில் பெருமழை காரணமாக மண் சரிவுகள் ஏற்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட சுமார் 300 குடும்பங்கள் பாடசாலைகளிலும் பொதுக்கட்டடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளன.

இத்தகவலை மேலதிக அரசாங்க அதிபர் வி. முருகையா தெரிவித்திருக்கிறார். [த-எ]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7

'இம் மாதம் 13 ஆம் திகதி நடைபெற இருந்த யாழ். மாவட்ட சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## மட்டக்களப்பிலும் எரிபொருளுக்கு கியூ!

மட்டக்களப்பு, ஆக. 7

மட்டக்களப்பில் உள்ள பெற்றோல் நிலையங்களுக்கு முன்னால் மண்எண்ணெய், டீசல் போன்றவற்றை வாங்க மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்டளவு எரிபொருளே ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்புக்கான ரயில் சேவை ஸ்தம்பிதமடைந்ததை தொடர்ந்து எரிபொருளுக்கு அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கிராமப்புறங்களில் விளக்கு எரிப்பதற்குக் கூட மண்எண்ணெய் பெற முடியவில்லை என்று கூறப்படுகிறது.

டீசல் தட்டுப்பாடு காரணமாக குறைந்த தனியார் வாகனங்களையே மட்டக்களப்பு வீதிகளில் காண முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஆக. 7

நிதர்சனம் வெளியீடான 'கூவு குயிலே' என்னும் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவம் நாளை சனி மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இது நிதர்சனம் நிறுவனத்தின் ஒன்பதாவது வெளியீடாகும். [இ-5]

## எந்தத் தேர்தலிலும் நவ சம சமாஜக் கட்சி இனி கூட்டுச் சேராது!

கொழும்பு, ஆக. 7

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் எந்தத் தேர்தலிலும் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதை எதிர்ப்பதாக நவசமசமாஜக் கட்சி அறிவித்திருக்கிறது.

இந்த முடிவை சுதந்திரக் கட்சியிடமும் இதர அரசியல் கட்சிகளிடமும் நவ சம சமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதும் பொதுவான சின்னம் ஒன்றின் கீழ் கூட்டு முன்னணி ஒன்றை அமைப்பதும் இயலாத காரியம்.

இவ்வாறு ந. ச. ச. கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்னா, சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். [ஒ-எ]

உ

[illegible] உற்சவகாலச் [illegible]

## நாளும் அருள்புரிவாய்!

நல்லை யம்பதி வாழுமுயர் முருகா
  நாமுனை தொழுவோம் நமக்கருள் புரிவாய்
தொல்லை வினைகளைத் தீர்த்திடும் குமரா
  எல்லை மீட்டிடும் புலிகளுக் கருள்வாய்
ஈழத்தின் விடிவிற்காய் எந்நாளும் இன்னுயிரை
  இழக்கின்ற வேங்கைகள் யாகத்திற் கருள்வாய்
ஞாலத்தில் தமிழன் நலமுடனே வாழ்ந்திடவே
  நாளும் அருள்புரிவாய் நல்லூரின் நாயகனே.

— அரியாலையூர் வே. ஐ குமரதாசன்.

## சுன்னாகத்துக்கு 45 பொதிகள்

மயிலணி, ஆக. 7

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த 45 தபால் பொதிகள் நேற்று யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து சுன்னாகம் தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இத் தபால் பொதிகள் இன்று வெள்ளி முதல் விநியோகிக்கப்படும் என்று சுன்னாகம் உதவி தபால் அதிபர் திரு. க. செல்வரத்தினம் தெரிவித்தார். [இ-89]

# அரசைக் கவிழ்ப்பதற்கு மக்கள் தருணம் பார்த்து கொண்டுள்ளனர்

## மாத்தறையில் நடந்த கூட்டத்தில் சிறிமா

கொழும்பு, ஆக. 7

''அரசின் அராஜக நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் விரக்தியின் விளிம்புக்கு வந்துவிட்டனர். ஆனால் அரசுக்கு எதிராக வாய்திறக்க முடியாதபடி ஜனநாயகம் வெறும் கேலிக்கூத்தாகிவிட்டது. மக்கள் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க தருணம் பார்த்துக் கொண்டுள்ளனர்.''

இப்படிக் கூறினார் எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா.

எதிர்க்கட்சிகள் நடத்தும் கறுப்புப் போராட்டத்தின் ஆரம்ப வைபவத்தை முன்னிட்டு மாத்தறையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். இதற்காகவே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிட நினைத்தேன். அதில் நிச்சயம் நான் வெற்றி பெறுவேன்.

ஆனால் ஜனாதிபதி ஆனதும் அப்பதவியில் நான் நீண்டகாலம் ஒட்டிக்கொண்டிருக்கமாட்டேன். குறுகிய காலத்தில் பதவியை ராஜினாமாச் செய்துவிடுவேன். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கவே நான் இவ்வாறு செய்யப்போகிறேன்.

எதிர்க்கட்சிகள் தங்கள் மத்தியில் உள்ள சிறுசிறு கருத்து வேறுபாடுகளை மறந்து ஒரே அணியில் திரண்டு போராடினால் மட்டுமே இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்பதை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது கருத்துக்களை தெரிவிக்க வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ சந்தர்ப்பம் தரப்படுவதில்லை. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் அரசின் புகழ் பாடிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் நாம் பாதயாத்திரை, வாகன அணி, இரைச்சல் போராட்டம், கறுப்புப் போராட்டம் மூலம் மக்களுக்கு எமது கருத்துக்களை வெளியிடுகிறோம்.

மாத்தறையில் ஆரம்பிக்கப்படும் இந்தக் கறுப்புப் போராட்டத்தை நாடு முழுவதும் பரவலாக்க வேண்டும் — என்றார்.

அரசின் முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோர் நடத்தியதாகக் கூறப்படும் ஊழல்களை வெளியிடப் போவதாக ஜனாதிபதி பயமுறுத்தி வருகிறார். அதை வெளியிட ஏன் ஜனாதிபதி தயக்கம் காட்டுகிறார் என்றும் சிறிமா அங்கு கேள்வி எழுப்பினார். [ஒ-3]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 7

மட்டக்களப்பு அம்பிலாந்துறைப் பகுதியில் கடந்த திங்களன்று இராணுவத்தினருடன் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் போராளி ஒருவர் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்தார்.

வீரவேங்கை சிவதர்சன் அல்லது மதிகரன் [கற்பூரப்போடி கோபாலப்பிள்ளை— குருக்கள் மடம், நாகமுனை] என்ற போராளியே வீரமரணம் அடைந்தவர் ஆவார். [இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழ் அகதிகள்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) சராலயத்திடம் கையளிக்கும்.

இந்தப் பட்டியலில் இருந்து அகதிகள் சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு விரும்புகின்றார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு சில அகதிகளை ஐ.நா. அதிகாரிகள் சந்திப்பார்கள். இதனை மேற்கொள்வதற்குத் தமிழ் நாட்டில் அகதிகள் உள்ள இடங்களை ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயமே தெரிவு செய்யும்.

இலங்கை அகதி ஒருவர் தாயகம் திரும்புவதை பின்போடுவதற்கு விரும்பினால் அல்லது இலங்கை திரும்புவதற்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்தால், அந்த விஷயம் இந்திய அதிகாரிகளினால் மறுபரிசிலனை செய்யப்படும்.

அகதிகள் சுயவிருப்பத்தின் பேரில் நாடு திரும்புவதை ஊக்குவிக்குமுகமாக ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் அகதிகள் மத்தியில் அதன் செயற்பாட்டையும் இலங்கை திரும்புவர்களுக்கான அதன் உதவித்திட்டத்தையும் விளக்கிக் கூறும் தகவல்களை வெளியிடுவதற்கு வாய்பளிக்கப்படும்.

இபப்டி அந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது.


**SHAMROCK**

யாழ். சுண்டுக்குளி.

**வர்த்தகம் - திரு. பசில்**

93 / 94 வெளிநாட்டு வியாபாரம்

93 - வங்கி - ஆரம்பம் 11 செவ். 6.00 மு. ப,

93 - அளவையியல்

**திரு. சோதிலிங்கம்**

அளவையியலும் விஞ்ஞான முறையும் (Part II) ஆரம்பம் 8 சனி 6.00 மு. ப.

[22068]


## தட்டெழுத்தாளர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) பட்டுள்ளதும் —

இது சம்பந்தமான விவரங்கள் ஜூலை 17 இல் வெளியான அரச வர்த்தமானியில் பிரசுரமாகி இருந்ததும் தெரிந்தவையே

இப்பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவு திகதி இன்றாகும். (அ-எ)

## இலவச சீருடை புத்தகம் ஜனவரியில்

கொழும்பு, ஆக. 7

மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம், இலவசப் பாடப் புத்தக விநியோகத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது

ஜனவரி 18 ஆம் திகதியில் இருந்து இலவசப் பாடப் புத்தகங்களுடன் இலவச சீருடைகளும் 43 லட்சம் மாணவருக்கு வழங்கும் வேலை ஒரே நேரத்தில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. [ஒ-எ]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் சுற்றுப் போட்டியில், இன்று நடைபெறவிருந்த இறுதியாட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக லீக் வட்டாரங்கள் தெரிவித்தன.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருந்த இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அந்தனீஸ் கோஷ்டியும் குருநகர் பாடும் மீன் கோஷ்டியும், மோதவிருந்தன. [அ]

## தட்டு எறிதலில் தங்கப் பதக்கம்

பார்சிலோனா, ஆக. 7

மறைந்த சோவியத் யூனியனில் இருந்து முதலில் சுதந்திரப் பிரகடனம் செய்த லிதுஏனியா நாடு தட்டு எறிதலில் (டிஸ்கஸ்) தங்கப் பதக்கம் பெற்றுள்ளது.

பேஸ்போல் விளையாட்டில் கியூபா தங்கப் பதக்கம் பெற்றது.

டேபிள்டென்னியில் சுவீடன் தங்கப் பதக்கம் பெற்றது. [இ-எ]


**நிரு ரியூசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 93**

நுண்கணிதம்
சார்பு வேகம்

ஆரம்பம்: **08-08-92**

சனி, ஞாயிறு 4 — 6

திரு. கமலசிங்கம்

[சி-3104]


# திரும்பிப் போய்விடு அல்லது முகாமிலேயே தங்கவேண்டும்

## ஈழ அகதிகளுக்கு பயமுறுத்தல்

லண்டன், ஆக 7

இலங்கைக்குத் திரும்பிப் போ; அல்லது இங்கிருக்கும் வரை அகதி முகாமிலே நீ இருக்கவேண்டி நேரிடும் —

இவ்வாறு தன்னிடம் கூறப்பட்டதாக தமிழ்நாட்டில் இருந்து விமான மூலம் திருமலைக்கு வந்து சேர்ந்த தமிழ் அகதி ஒருவர் பி.பி.ஸி. முகவரிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப இந்தியா மீண்டும் எடுத்துள்ள முடிவு பலருக்கும் வியப்பைத் தந்துள்ளது.

உள்நாட்டுப் போரினால் அஞ்சி தமிழகத்துக்கு ஓடிய தமிழ் அகதிகள் மீண்டும் சண்டை நடக்கும் பகுதிகளுக்கே திருப்பி அனுப்பப்படும் நிலைமை உருவாகியுள்ளது — இப்படி பி. பி. ஸி. தனது செய்தி விமர்சனத்தில் சுட்டிக்காட்டியது. (ஒ-5)

## இன்று

தென்மராட்சி. ஆக. 7

தென்மராட்சி பகுதி உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளி பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் உள்ளூராட்சிப் பிரிவினரால் இக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ-117]

★ ★ ★

கொழும்புத்துறை. ஆக. 7

நல்லூர் ஆலயப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உணவுச் சாலைகள், தேநீர்ச்சாலைகள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான சாலைகள், பால்சாலைகள், முட்டாஸ் விற்பனை நிலையங்கள் ஆகியனவற்றின் உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரியினால் நடாத்தப்படும். [இ-30]

★ ★ ★

4 ஆவது தேசிய சாரணர் ஜம்போறியில் பங்குபற்ற விரும்பும் சாரணர்கள், திரிசாரணர்கள், சாரணத்தலைவர்கள், குழுச்சாரணதலைவர்கள் உதவிமாவட்ட ஆணையாளர்கள் ஆகியோர்களுக்கான விசேட கூட்டம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இன்று வெள்ளி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். [இ]

## இணக்கம் காண முயற்சி

சுதந்திரக் கட்சியில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கும், திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியங்கள் பற்றி கவனமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க கட்சி வட்டாரங்கள் முயற்சித்து வருகின்றன.

சுதந்திரக்கட்சி எம். பிக்களான சுனில்ரூனசிங்கா, சி. வி. குணரத்தினா ஆகியோர் மூலம் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [த எ]

## திருக்குறள் மாநாடு!

உலகத் தமிழ் மறைக் கழகம் நடத்தும் 25ஆவது திருக்குறள் மாநாடு இன்று 7, 8, 9ஆம் திகதிகளில் சென்னையில் உள்ள வசந்த மஹாலில் நடைபெற உள்ளது. [த-எ]

## துர்க்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) டதால் ஏற்பட்ட சேத விவரங்களையும்' மதிப்பீட்டையும் ஏற்கனவே அரச அதிபர் அரசாங்கத்திடம் ஒப்படைத்திருந்தார்.

ஆலய பரிபாலனசபையினர் அரச அதிபரிடம் கையளித்த சேதமதிப்பீட்டில் மொத்தம் 39 லட்சம் ரூபாவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விமானத் தாக்குதலினால் ஆலயக் கோபுரம், மடப்பள்ளி, மண்டபம், காரியாலயம் ஆகியன பலத்த சேதமடைந்திருந்தன. [அ-162-15]

## படையின...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) மாகாணத்தில் கையாள்வதாகவும் பிரிகேடியர் தயா விஜேசேகரா தெரிவித்தார்.

இராணுவம் திட்டமிட்டு வரும் புதிய போர் முறைகள் என்ன என்பதைத் தெரிவிக்க பிரிகேடியர் விஜேசேகரா மறுத்துவிட்டார்.

கடந்த வாரம் படையினர் கொல்லப்பட்ட போதும் இது போன்று, புதிய போர் முறைகளைக் கையாளப்போவதாகவும் முக்கிய இடங்களில் படையினரை நிறுத்தப் போவதாகவும் இராணுவம் கூறிய பின்னரே, விடுதலைப் புலிகள் 5 இராணுவத்தினரைக் கொன்றனர் என்று ஏ.எப்.பி. செய்தியாளர் சுட்டிக்காட்டுவதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.


**மல்லாகம் மகா வித்தியாலயம்**

வளர்ந்தோர் கல்வித் திட்டம்

**ஆங்கில வகுப்புகள்**

மேற்படி பயிற்சி வார இறுதியில் நடைபெறும். இதில் கலந்து கொண்டு பயிற்சிபெற விரும்புவர்கள் மல்லாகம் மகா வித்தியாலய அதிபரிடம் விண்ணப்பங்களை 10-08-92 க்கு முன் சமர்ப்பிக்கவும்.

[சி/2494] — அதிபர்


## மரண அறிவித்தல்கள்

### செல்லம்மா தம்பிமுத்து

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி த. செல்லம்மா [சின்னத்தங்கச்சி] காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பிமுத்துவின் [மலாயன் பென்சனியர்] மனைவியும், தங்கமலரின் தாயாரும், காலஞ்சென்ற க. இரத்தினசபாபதியின் [உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி, கொழும்பு] மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-8-92 சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. சகாதேவன்
[உதவி பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்]

துரை வீதி,
இணுவில்.

[22070]

### செல்லப்பா சிவசாமி

[வர்த்தகர் - புங்குடுதீவு, 4]

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல 4, பிள்ளையார் வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமான வர்த்தகர் - செல்லப்பா சிவசாமி அவர்கள் 05-08-1992 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நல்லமுத்து (நல்லபிள்ளை) வின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி (சுவிஸ்), சுசிலாதேவி, ஏகாம்பரநாதன் (சுவிஸ்), லோகநாதன் (S. L. P டிரான்ஸ்போட் பிரபல வர்த்தகர்) காலஞ்சென்ற கௌரீஸ்வரி, தவரஞ்சிதமலர், நகுலேந்திரநாதன் (சுவிஸ்) சந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மா துரைசிங்கம் (சுவிஸ்) பொ. வைரமுத்து (நிர்வாக உத்தியோகத்தர், உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களம், திருமலை), நிலகவதி (சுவிஸ்), இந்திராணி, நா. தெட்சணாமூர்த்தி (வர்த்தகர் - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருவாளர்கள் பேரம்பலம், தில்லையம்பலம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, சிவலிங்கம், பொன்னம்பலம், அன்னம்மா, தம்பிராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. லோகநாதன்
(மகன் - சின்னாம்பி)

இல 4, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[22072]


**எடிசன் அக்கடமி**

(யாழ் இந்து அருகில்)
K K S Road, JAFFNA.

புலமைப் பரிசில் வகுப்பு

**ஆண்டு 4**

தமிழ்
குழந்தைவேல்
கணிதம்
பாஸ்கரன்

அனுமதிப் பரீட்சை மூலம் மாணவர்கள் 2 பிரிவாகப் பிரிக்கப்படுவர்.

அனுமதிப் பரீட்சை
**09-08-92**
ஞாயிறு காலை 9.00 மணி
(22067)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 - 07 - 1914



இறைவனடியில்
7 - 8 - 1985

### அமரர் கணபதிப்பிள்ளை சண்முகம்

ஊக்கத்தால் உயர்ந்து
ஊருக்கு உபகாரியாய்
உழைத்து ஓங்கி நின்று
உள்ளத்தே குடியிருக்கும்
உத்தமரே பெருந்தலைவா!
ஏழாண்டுகள் என்ன
எழு நூறு ஆண்டு போயினும்
எம் மனதிருந்து அழியாதே
உனது தெய்வ முகம்.

தாங்கள் இறைவனடி சேர்ந்த நினைவு நாளில் எங்கள் இதயத்து நீங்கா நினைவுகளை உங்களுக்காகப் படைகின்றோம்.

தேவாலய வீதி,
சங்கானை.

— குடும்பத்தினர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org